# வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி ஆதிவைரவர் கோவில் வரலாற்றுக் கண்ணோட்டம்

ஒரு கோவில் வரலாற்றை ஆராயமுற்படும்போது அக்கோவிலை வழிபடும் ஊர் மக்களின் வரலாற்றை அறிவது பொருத்தமானதாக இருக்கும். இது அவசியமானதுமாகும். அந்தவகையில் ஆதிகோவிலடி வாழ்மக்களின் மூதாதையர்கள் பற்றிய வரலாற்றை முதற்கண் ஆராய முற்படுகிறோம்.

யாழ்ப்பாண இராச்சியம் என்ற வட இலங்கை பண்டைய காலத்தில் நாக நாடு, சிங்கை நாடு (சிங்கை நகர்) மணலை (மணற்றி), ஈழம், உத்தரதேசம், தமிழ்ப்பட்டினம், நாகதீபம், நாகதீவு என பலவாறான பெயர்களால் அழைக்கப்பட்டதாக வரலாற்று ஆராச்சியாளர்கள் மூலம் அறியக்கிடைக்கின்றது.

“வரலாற்றில் வல்வெட்டித்துறை” என்ற தலைப்பில் வல்வை - திரு. பா. மீனாட்சிசுந்தரம் அவர்களால் ஆவணப்படுத்தப்பட்டு 2006 ம் ஆண்டு சித்திரை மாதம் வல்வை முத்துமாரி அம்மன் திருவிழாக்காலத்தில் 12 ம் திருவிழா அன்று வெளியிடப்பட்ட நூலில் வல்வெட்டித்துறை பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
சங்கிலி குமாரன் யாழ்ப்பாணத்தை அரசு செய்துவரும் நாளில் 1619 ம் வருடம் இந்தியாவின் தஞ்சாவூர் நாயக்கன் ஒருவன் பறங்கியரை வெற்றி கொள்ளும் நோக்குடன் ஒரு சேனையை அனுப்பி வைக்க அச்சேனை ஒரு குளக்கரையில் பாளையம் இட்டிருந்ததென “யாழ்ப்பாண வைபவ கௌமுதி” என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பறங்கியருடைய 2 ம் நாள் போரின் போது நெடுந்தீவில் வந்திறங்கிய போர்ப்படையுடன் போர்தொடுக்கும் முகமாக வல்வெட்டித்துறையில் பாளையம் இட்டிருந்த வேளக்காரப் படையை நல்லூருக்கு அழைப்பித்ததாகவும் இந்த வேளக்காரப்படைக்கு சமரபாகுதேவன் என்பவன் தளபதியாக இருந்துள்ளான் என்பதும் தெரியவருகின்றது. கல்லிடைத்தேவன் என்பவனது படையணி பருத்தித்துறையில் பாளையமிட்டிருந்தது, மேலும் காரையாரத்தலைவன் தஞ்சாவூரிலிருந்து ஒரு பலத்த சேனையை இட்டுக் கொண்டு வந்து இராச்சியத்தில் எல்லாம் அதிகம் போராடும் குணம் உள்ளோரான மீன்பிடிக்காரர் சேரியில் தங்கியிருந்து போர்த்துக்கேயரை தாக்கும்நோக்கோடு புறப்பட்டான் என “யாழ்ப்பாண வைபவவிமர்சனம்” என்னும் நூல் கூறுகின்றது. சண்டையிற் கைவந்தோரான “கரையாரைத்“ துணைகொண்டு முதலிமார்கள் சங்கிலி மன்னருடன் போராட சங்கிலியும் தஞ்சாவூர் நாயகனுக்கு ஆளனுப்பி துணைப்படையொன்றை அழைப்பித்து முதலிமாருடன் போருக்கெழுந்தான். இப்படையும் “வருணகுலத்தான்” எனும் கரையாரத் தலைவன் கீழ்ப்போராடியது என யாழ்ப்பாண வைபவ விமர்சனம் மேலும் தெரிவிக்கிறது. மேலே குறிப்பிட்ட “கரையார்” எனப்படுவோர் “குருகுலத்தார்” என்னும் பிராமண வர்க்கத்திலிருந்து வந்தவர்கள் என்றும் சாதி நிர்ணயப் புராணம் தெரிவிப்பதாக பிரபல ஆய்வாளர் திரு. டி. சிவராம் அவர்கள் கூறியுள்ளதோடு வல்வெட்டித்துறை மக்கள் “கரையார்” என்னும் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களில் கடலோடிகள் என்று ஒரு பிரிவினரும் மற்றையோர் கரையார் என்றும் (இருபிரிவினரும் கரையோரங்களில் வசிப்பவர்கள்) இருபிரிவாக இருக்கிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் திருகோணமலையிலிருந்து வெளிவரும் “சிவநெறி” என்னும் சஞ்சிகை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குருகுல குடும்பத்தார் என அழைக்கப்படுகின்ற சந்ததியினரால் திருகோணமலை மடத்தடி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய மூலமூர்த்தி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என இவ்வூரவர்களை “குருகுலத்தார்” எனக் குறிப்பிடுகின்றது.

மேலும் யாழ்ப்பாண வைபவகௌமுதி என்னும் நூலை எழுதிய திரு. க. வேலுப்பிள்ளை குருகுலத்தவர் எனப்படுவர்களைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றார். “யாழ்ப்பாணப் பட்டினத்தில் பறங்கியர் காலம் தொட்டு நிலத்தரசர்களாகவும், அரசாட்சி உத்தியோகங்களின் பலவற்றை வகிப்போராயும் இருக்கின்ற ஒரு பகுதியினரான இவர்கள்

தென்னிந்தியாவின் கரைத்துறைப் பட்டினங்களினின்று வந்தமையால் “கரையார்” என்னும் பெயரில் சொல்லப்படினும் நுழையர் செம்படவரோடு சமனிலைப்படுத்தி நோக்கப்படக்கூடாத நாட்டாண்மைக்காரர் ஆவார்”.

தென்னிந்தியாவின் குருகுலத்தலைவர்கள் தமிழ் அரசர் காலத்திலும் யாழ்ப்பாணச் சேனைக்கு பலகாலும் உபபலமாய் வந்ததுண்டு. 1619 ம் வருடம் தஞ்சாவூர் நாயக்கன் பறங்கியருக்கு எதிராய் அனுப்பிய சேனையும் குருகுலத் தலைவனின் கீழேயே வந்தது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு வந்தவர்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் வல்வெட்டித்துறையில் கப்பல்கட்டும் தளமான வாடியடி எனும் பகுதிக்கு மேற்குப்புறமாக குடியேறினர். இந்தப் பரம்பரையினரின் வழித்தோன்றல்களே தற்போது உள்ள ஆதிகோவிலடி மக்கள் எனக்கொள்ளலாம்.

இச்சிறிய குறிச்சி இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன் வாடியடியை கிழக்கெல்லையாகவும் பாதிரி பங்களா என அறியப்பட்ட ஊரிக்காட்டில் அமைந்திருந்த மிசனரிமாரின் ஓய்வு இல்லத்தை மேற்கு எல்லையாகவும் காங்கேசன்துறை நெடுஞ்சாலையை தெற்கெல்லையாகவும் பாக்குநீரிணையை வட எல்லையாகவும் கொண்ட ஏறக்குறைய 30 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்த படையினரின் ஒரு பகுதியின் பரம்பரையினர் என மனம் கொள்ளலாம். (30 வருட காலப் போர் அனர்த்தங்களால் மக்கள் இடம் பெயர்ந்து சென்றபின் தற்பொழுது ஏறக்குறைய 325 குடும்பங்களைச் சேர்ந்த 1400 பேர் வசிக்கிறார்கள்
எனத்தரவுகள் கூறுகின்றன)

ந. சிவரத்தினம் எனும் இயற்பெயரும் ஆதிகோவிலடி ஜெயம் எனும் புனைப்பெயரும் கொண்டவரால் 18-02-92 ல் கற்பூரத் திருவிழாவுடன் நிறைவு பெறும் உற்சவகாலத்தை முன்னிட்டு ஈழநாடு பத்திரிகையில் வெளியிடப்பட்ட “வல்வெட்டித்துறை அருள்மிகு ஆதிவைரவர் கோவில் மிகவும் பழைமை வாய்ந்தது” என்ற கட்டுரையில் இருந்து .....
வல்வெட்டித்துறை அருள் மிகு ஆதிவைரவர்கோவில் மிகவும் பழமையானது.
யாழ்ப்பாணத்தில் உள்ள வடமராட்சியில் அமைந்த வல்வைத் திருநகர் வானத்திரு நகரோ எனத்தக்கது. செல்வம் என்பது இங்கு பணத்தை மாத்திரம் குறிக்கவில்லை. கல்விச்செல்வம் என்பதுபோல எல்லா வளங்களையும் சுட்டும். அங்கு இல்லாதவை எவை? எல்லாம் உண்டு.

எந்தப்பெரு நகரும் இந்தத் திருநகருக்கு இணையாகாது. இன்றையது எந்திரலோகமாயினும் இது இந்திரலோகமாகவே திகழ்ந்தது. வருடாவருடம் இந்திரவிழா எடுப்பதால் மாத்திரம் இந்திரலோகமல்ல, எல்லாச் சிறப்புக்களும் நிறையப் பெற்றது. எந்தச் சிறப்பாலும் குறைவற்றது.

சிவசம்புப் புலவரின் “வல்வைக் கலித்துறை இதை அழகாக எடுத்தியம்பும், அவற்றை அங்கே காண்க.

மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர் - 2011 - 02 - வல்வை ஆதிகோவிலடி அருள்மிகு ஆதிவைரவர் தேவஸ்தானம் நல்லூர் நல்லையானது போல வல்வெட்டித்துறை வல்வையானது. ஆதிக்கத்துக்கு அரணானது, நாத்திகத்துக்கு முரணானது, சைவத்தில் நிற்பது சிவாகமங்களைக் கற்பது. சிவவழிபாடு பேணுவது, தவநெறி பூணுவது இங்கே காட்சி தரும் ஓங்கியுயர்ந்த சிவன் கோவில், அம்மன் கோவில் மற்றும் வைரவர் கோவில்கள் இதற்குச் சாட்சி.

வைரவர் கோவில்களில் ஒன்று ஆதிவைரவர் கோவில். இது வல்வை நகரின் மேற்குக் கரையின் காவலரணாக அமைந்துள்ளதுடன் இந்த இடத்திலேதான் முத்துமாரியம்மன் மூதாட்டி உருவத்தில் கோடிக்கரையிலிருந்து வந்து இறங்கியதாகவும் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

பொதுவாக இதை ஆதிகோவில் என்றே அழைப்பர். மிகவும் பழமை வாய்ந்தது எனக் கருதப்படுவது. முத்துமாரி அம்மன் கோவில் ஐரோப்பியர் வருகைக்கு முன்னமேயே இருந்திருக்கின்றது. இதற்கு ஆதாரங்கள் பல உள, ஐரோப்பிய ஆட்சிக் காலத்திற்கு முன் இலங்கையில் பதிவுமுறை ஏற்பட்டது எனச்சரித்திரங்கள் கூறுகின்றன. பதிவுமுறை ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் புதியதொன்றல்ல.

யாழ்ப்பாணத்தமிழ் அரசர் காலத்திலும் அமைந்திருந்த நடைமுறையென கூறுவர். எது எப்படியாயினும் தமிழரசர் காலத்துப் பதிவுகள் எமக்குக் கிடைக்குமாறில்லை. ஐரோப்பியர் காலப்பதிவுகளில் அம்மன் கோவில் இடம் பெறுகின்றது. ஆதிகோவில் என்னுமிடத்து “ஆதி” என்ற சொல் எம் கவனத்தை ஈர்க்கின்றது. வல்வையில் ஆதிதொட்டு இருந்துவந்த கோவிலோ எனக்கருதத் தோன்றுகின்றது.

அம்மன் கோவிலுக்கு முந்திய பழைமை உடையதாகலாம். அப்படியானால் “ஆதிக்கோவில்” என்றல்லவோ வந்திருக்கும். இலக்கணக் கட்டுப்பாடுகள் படித்தவர்களுக்கு, பாமரர்க்கல்ல, பாமரர்களும் இலக்கணவிதிகளை ஏற்படுத்துபவர்கள். ஆதிகோவில் என்றே வழங்கி வந்தார்கள்.

ஐரோப்பிய ஆட்சியாளர்கள் பதிவுகளில் ஆதிகோவில் இடம்பெறாதது ஏன்? ஆதிகோவில் சிறிய கோவிலாக இருந்துள்ளது. பதிந்தவர்களின் கண்ணுக்கும், கருத்துக்கும் படாதிருந்திருக்கலாம். ஆதிகோவிலடி மக்களும் பதிய வேண்டும் என்ற அக்கறை அற்றவர்களாக இருந்திருக்கலாம். எப்படியாயினும் ஆதிகோவில் அம்மன் கோவிலைப் போலப் பழைமை வாய்ந்தது என்பதை மறுக்கமுடியாது. நெல்லி நின்ற இடம் நெல்லியடியானது போல, தாளை அதிகம் நின்ற இடம் தாளையடியானது போல, ஆதிகோவில் அமைந்த இடம் ஆதிகோவிலடியாயிற்று. ஆதிகோவில் சிறு கொட்டிலாக இருந்தது, கொட்டிலாக இருந்தாலும் மட்டிலா அருள்வளமுற்றது. கோவில் மிகப் பெரிய முதிர்ந்த நாவல் மரத்தின் கீழ் இருந்தது.

இவ்வூரவர்களுக்கு எல்லாமே வைரவர்தான். வைரவர் ேத்திர பாலகர் எனவும் பெயர் பெறுவர். இவர்களின் குலதெய்வமும் அவர்தான். வழிபடுதெய்வமும் அவர்தான். காவற் தெய்வமும் அவர்தான். கடற்றொழிலுக்கு போவோர், திரவியந்தேடும் நோக்கோடு வியாபாரத்திற்கு போவோர் வைரவரை வழிபட்டு நேர்ந்து விடைபெற்றுச் செல்வர், சென்று மீண்டதும் தமது உழைப்பின் பெரும்பகுதியை வைரவருக்கு வழிபாடுகள் பூசனைகளை வெகுவிமரிசையாக இயற்றி மகிழ்வர்.

அக்காலத்து முக்கிய பிரயாண சாதனம் மாட்டுவண்டி, கிழக்கு ஊருக்கும் வன்னிப்பிரதேசங்களுக்கும் உழைப்புக் கருதி மாட்டுவண்டிகளிற் செல்வோர் கூட்டங் கூட்டமாகச் செல்வர். அது அவர்கட்கு பல நாட்பயணம் பல இடங்களில் தரித்துக் களையாறிச் செல்லவேண்டியிருக்கும். வண்டிக்காரரின் தரிப்புக்களிலே ஆதிகோவிலடிப் பிரதேசமும் ஒன்று. இங்கே தங்கி நீராடி - நேர்த்திகள், வழிபாடுகள் செய்து பொங்கிப்படைத்து, உண்டு, களையாறிப் புறப்படுவர். மீளும் பொழுதும் இவ்விதம் செய்வர்.

சிவன் வைரவர் மூர்த்தங்கொண்டவர். திருமால் பிரமற்கு ஏற்பட்ட அகந்தையை ஒழிப்பதற்காகவே இம்மூர்த்தங்கொள்ளப்பட்டது ஐம்முகங்கொண்டிருந்த பிரமன் ஒரு தலைகிள்ளப்பட்டான். நான்முகனான், திருமால் வைரவரின் பிட்சாபாத்திரத்தைத் தன் குருதியால் நிரப்பட முடியாதவராயினர். இருவரும் அகந்தை நீக்கப்பெற்றனர். அதன்பின்னர்

வைரவர் மோனநிலையில் அமர்ந்து விட்டார். மோனத்திலிருக்கும் வைரவரின் கொட்டில் இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன் ( 1992 இல் எழுதப்பட்ட கட்டுரையின்படி) கற்றளியாக்கப்பட்டது. மூலஸ்தானத்திற்கு கருங்கல் விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டது. இங்கு அர்ச்சகர்களாகப் பணிபுரிந்தோர் கெருடாவிற் சைவக்குருக்கள்மார் சில காலத்தின் பின்னர் மூலமூர்த்தியிற் சிறு ஊறு ஏற்பட்டதால் புதிய விக்கிரகம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. கடந்த சில வருடங்களாக சிவத்திரு. வே. பாலச்சந்திரக் குருக்கள் நித்திய பூசைகளைச் செய்து வருகிறார். (தற்பொழுது சிவஸ்ரீ தி. விக்னேஸ்வரக் குருக்களால் நித்திய பூசைகள் மேற்கொள்ளப் படுகின்றன)

ஊர்மக்கள் எல்லாரும் சேர்ந்து புனருத்தாரணம் செய்தனர். பழைய கற்கட்டடம் அகற்றப்பட்டது புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. கும்பாபிடேகம் மண்டலாபிடேகம், சங்காபிடேகம் எல்லாம் உரிய முறைப்படி நடைபெற்றன. இது நடைபெற்றது சென்ற ரௌத்திரி வருடம் ஆவணி மாதம் ஆகும். (21-08-1980) அதன் பின்னர் திருவிழாக்கள் உரிய பாகத்தில் ஆரம்பமாகிச் சிறப்பாக நடைபெறுகின்றன. நடைபெறுவன அலங்காரத்திருவிழாக்கள், பத்தாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும். ஊஞ்சல் நிகழ்ச்சியும் சிறப்பாக நடக்கும். இதனைத் தொடர்ந்து கற்பூரத்திருவிழாவுடன் உற்சவம் நிறைவு பெறுகிறது.

இக்கோவிலின் உற்பத்தியின் வரலாறு சரியாக தெரியாவிட்டாலும் மிகப் பழயகாலந்தொட்டே காவல் தெய்வமாக வைரவரை நாவல் மரத்தின் கீழ் ஒரு ஆலயத்தை வைத்து வழிபட்டு வந்ததாக அறிய முடிகிறது. ஆரம்பத்தில் மரத்தின் கீழ் இருந்த வைரவருக்கு சிறு கொட்டில் அமைத்து மக்கள் வழிபட்டு வந்தனர். இக் கோவில் ஆதியிலிருந்தே பொதுவானதாக இருந்து வந்ததே தவிர தனிப்பட்ட எவரும் உரிமை கொண்டாடியதாக வரலாறுகிடையாது. ஒரு சிறிய நிலப்பரப்பில் நாவல்மரத்தடியில் வழிபாடுகள் நடந்தாலும் சுற்றாடல் முதிர்ந்த பல புளிய மரங்களாலும் தென்னை மரங்களாலும் சூழப்பட்டிருந்தது.

17 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொட்டிலாக இருந்த வழிபாட்டிடத்தை சுற்றி முருகைக்கல் எனும் சுண்ணாம்புக்கல் கொண்டு மதில் அமைத்து கோவிலுக்கு அரண் செய்தனர். பின்னர் மூலமூர்த்தியை இந்தியாவிலிருந்து தருவித்து பாலஸ்தாபனம் செய்வித்ததுடன் சுண்ணாம்புக் கட்டிடத்தினால் வைரவருக்குரிய கர்ப்பக்கிருகம் அமைத்து மூலஸ்தானத்தில் பிரதிட்டை செய்து வழிபடத்தொடங்கினர். இக்கோவில் கடலோரத்தில் அமைந்திருப்பதால் இதன் தெற்குப்புறத்தில் கோவிலுக்கான கிணறு அமைக்கப்பட்டிருந்தது.

இக்கோவிலைச் சுற்றி குடிமக்கள் பெருகிவந்தமையாலும் சுற்றாடலிலுள்ள காணிகள் தனிப்பட்டவர்களால் கொள்வனவு செய்யப்பட்டும் வேறுவழிகளில் கைமாற்றப்பட்டமையாலும் கோவிலை விஸ்தரித்துக் கொள்ள இடவசதி போதாமலிருந்தது. இருந்தபோதும் பொது மக்கள் ஆதிவைரவர் மீதுகொண்டிருந்த பக்திகாரணமாகவும் அவரே தமது குலதெய்வமாக இருந்து தம்மைகாத்துவந்ததாலும் அயலவர்களிடத்திலிருந்து காணிகள் கொள்வனவு செய்தும், நன்கொடையாகப் பெற்றும் கோவிலை புதுப்பித்து கற்கட்டிடம் கட்டி சீமெந்துகல் கர்ப்பக்கிருகம் மற்றும் மண்டபங்களை கட்டியதுடன் இது வரையிருந்த வைரவரை பாலஸ்தாபனம் செய்ய முற்பட்ட போது பெருமானின் கால்களில் சிறு ஊறு ஏற்பட்டுவிட்டது. இதனால் இவர் பக்தி பூர்வமாக “சொத்தி வைரவர்” எனவும் போற்றப்பட்டார்.

பல அடியார்களின் அபிப்பிராயப்படி ஊறு உள்ள விக்கிரகத்தை வழிபடுவது குற்றமாகும் எனக் கூறப்பட்டதால், அவ்விக்கிரத்தை கடலில் சங்கமிக்கவைத்து புதியதொரு விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட இருந்த சமயத்தில் பெருமான் ஒரு அடியாரின் கனவில் தோன்றி தன்னையும் வைத்து வழிபடும்படி அருள்வாக்கு கூறியமையால் அவ்வைரவர் இன்றும் இக்கோவிலில் வைத்து வழிபடப்படுகிறார்.

இக்கோவில் 1825ம் ஆண்டு பொதுமக்களால் கட்டப்பட்டதாக யாழ்ப்பாணக் கச்சேரிப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே கூறப்பட்டது போன்று இது ஆதிகோவிலாக இருந்தாலும் சிறிய கோவிலாக இருந்தமையால் பதிவுகளுக்கு உட்படாதிருந்திருக்கலாம்.


இக்கோவிலில் நிர்வாகம் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட குழுவினாராலேயே ஆதிகாலந்தொட்டு நடாத்தப்பெற்றுவருகிறது. பண்டய காலத்தில் இவர்கள் தானியன்மார் மற்றும் மணியகாரர் என அழைக்கப்பட்டனர். இக் கோவிலின் கும்பாபிஷேகம் இறுதியாக 21-08-1980ல் நடந்தேறியது. 12 வருடங்களுக்கொரு முறை நிகழ்த்தப்படவேண்டிய இம் மஹாகும்பாபிஷேகம் நாட்டிலிருந்த போர்ச்சூழ்நிலையால் தடைப்பட்டிருந்து. இது கடந்த 24-01-2011 ல் தான் கைகூடிற்று இதனை தொடர்ந்து மண்டலாபிஷேகம் பக்தர்களால் நடாத்தப்பட்டு வருகின்றது.


1998ம் ஆண்டிலிருந்து அலங்காரத்திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. பொதுக்கூட்டத்தில் திருவுளங்கசீட்டு முறையில் உபயகாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். போரின் தாக்கத்தினாலும் 2004 இல் ஏற்பட்ட சுனாமி பேரழிவினாலும் பாரிய அளவில் பாதிக்கப்பட்ட இக்கோவிலை புனருத்தாரணம் செய்ய மக்கள் மனம் கொண்டனர். இது முழுக்க முழுக்க இங்கு வாழும் பொதுமக்களால் நல்கப்பட்ட பேருதவியினாலும் ஆதிகோவிலடியிலிருந்து புலம்பெயர்ந்து பிறநாடுகளில் வாழும் எமது மக்களின் நிதியுதவியுடனும் பரிபாலன சபையின் விடாமுயற்சியாலும் தொடர்ந்து கட்டிடப்பணிகள், வர்ணம் பூசுதல் ஆகியன இடம் பெற்று வருகின்றன.

இவற்றைப் பூரணப்படுத்த ஆதிவைரவப் பெருமானின் அருளை அனைவரும் வேண்டி நிற்போமாக.

**தொகுப்பு:**
**நடராசா சிவரத்தினம்(ஜெயம்)**
**முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளர்,**
**இலங்கை வங்கி , வடமாகாணம்**
**B.A.(S.L), A.I.B, F.I.B(S.L),**
**P.G.Dip - in Pub. Admin.**


மலர்த் தொகுப்பாளராகிய நான் கர்ணபரம்பரையாக கேள்வியுற்ற ஆதி வைரவர் கோவிலின் தோற்றங்களில் காலத்திற்குக்காலம் ஏற்பட்ட வளர்ச்சியினைக் கூற ஓவியர் ரமணி அவர்கள் அதனை வரைபடமாக்கியுள்ளார்.











தொகுப்பு:
நடராசா சிவரத்தினம்(ஜெயம்)
முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளர்,
இலங்கை வங்கி , வடமாகாணம்
B.A.(S.L), A.I.B, F.I.B(S.L),
P.G.Dip - in Pub. Admin.